**Spl.SC.No. 12/2020** Dated:. 05.02.2025

( எதிரிகள் ஆஜர் )

பைரவகேசவன்

**அ.சா. 1 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

21.03.2020 ல் இரவு தான் என் மகன் இறந்ததாக கூறியுள்ளேன். காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தது 22.03.2020 ல் மதியம் 1.30 மணியளவில் கொடுத்தேன். அந்த புகார் கொடுப்பதற்கு முன்பே காலை 10 மணிக்கு என் மகன் இறந்தது தொடர்பாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனை முன்பு உறவினர்களுடன் மறியல் செய்தேன் என்றால் உறவினர்கள் செய்ததாக சாட்சி சொல்லியிருக்கிறார். அந்த இடத்தில் நானும் இருந்தேன். தேவிப்பட்டிணம் காவல் நிலைய ஆய்வாளர், இராமநாதபுரம் காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவலர்கள் அங்கு இருந்தனர் என்றால் சரிதான். தேவிப்பட்டிணம் காவல் நிலைய ஆய்வாளர், இராமநாதபுரம் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு அப்போது வழக்கின் சம்பவம் குறித்து தெரியும் என்றால் சரிதான் காலை 10 மணிக்கு என் மகன் இறப்பு குறித்து தேவிப்பட்டிணம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடமும், இராமநாதபுரம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடமும் புகார் எதுவும் அளித்தேனா என்றால் இல்லை. 01.08.2024 ல் நான் இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணை செய்யப்பட்டேன் என்றால் சரிதான். அந்த முதல் விசாரணையில் 18.02.2020 அன்று எதிரி பாலா என்ற பாலமுரளி கிருஷ்ணன் பயன்படுத்திய டிராக்டரும், JCB யும் அவருக்கு சொந்தமானது அல்ல என்றும், அந்த இரு வாகனங்களும் என் மகனை கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். 18.02.2020 ல் சம்பவம் எதுவும் நடந்ததாக என் புகாரிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் கூறியுள்ளேன் என்று சாட்சியம் அளிக்கிறார். தற்போது புகாரில் 18.02.2020 சம்பவம் குறித்து கூறவில்லை என சாட்சியம் அளிக்கிறார். டிராக்டர் மற்றும் JCB வைத்து என்

மகனை கொல்ல பயன்படுத்திய ஆயுதங்கள்தான் என்று சொல்லியுள்ளேன். அந்த விவரத்தை என் புகாரிலோ, வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. புகாரிலும் கூறவில்லை. இராமநாதபுரம் கருவேப்பிலைகாரன் தெருவை சேர்ந்த அமீர்கான் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அந்த அமீர்கான் என்பவர் தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் 26.07.2020 அன்று என்மீது புகார் கொடுத்தது அது தேவிப்பட்டிணம் காவல் நிலைய குற்ற எண்.309/2020 ல் இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)– ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் புலன் விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதி அறிக்கையும், இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண் 1 ல் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த அமீர்கான் என்பவர் அந்த சம்பவத்தன்று என் மகனை அழைத்து சென்று எதிரிகளுக்கு அவர் இருக்கும் இடம் பற்றி தெரியப்படுத்தி இந்த கொலைக்கு அமீர்கானும் காரணம் எனவும், எனவே அவரையும் வழக்கில் சேர்க்கவேண்டும் என புகார் மனு கொடுத்து அதன் அடிப்படையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Crl.OP(MD) 10475/2020 ஒரு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவின் நகல் எதிரி தரப்பு சான்று ஆவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த மனுவுடன் இணைந்த தட்டச்சு செய்யப்பட்ட தாள்களும் இணைக்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. காவல் கண்காணிப்பாளரிடம் நான் கொடுத்த புகார் மனுவில் அந்த சம்பவத்தன்று இரவு 8.30 மணிக்கு என் வீட்டிலிருந்த என் மகனை அமீர்கான் வந்து அழைத்து சென்றதாக கூறியுள்ளேன். இரவு 10 மணி வரை என் மகன் அமீர்கானுடன் இருந்ததாகவும், அதன் பிறகு அமீர்கான் தேவிப்பட்டிணத்திற்கு என் மகனை அழைத்து சென்ற 10 நிமிடங்களில் சம்பவம் நடந்ததாகதான் கூறியுள்ளேன். என் மகன் இராமநாதபுரத்திற்கு வாகனத்தின் உதிரிபாகங்கள் வாங்க சென்றதாக வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். அந்த மனுவில் இந்த சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு முதல் நான்கு சாட்சிகள் குறித்த எந்த விசயமும் நான் சொல்லவில்லை. அதன்

பின்பு நான் அமீர்கான் மீது தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அவர் மீது நடவடிக்கை எடுக்க கூறியும், நடவடிக்கை இல்லாததால்தான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனுதாக்கல் செய்தேன். 10.10.2020 ல் அந்த மனுவின் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று வழக்கறிஞர் திரு. முனியசாமி ஆஜராகி தெரிவித்ததன் அடிப்படையில் மனு Crl.OP(MD).10475/2020 முடிக்கப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சாட்சி சா.பொ.ஆ. 1 என்று பதிவு செய்த பென்டிரைவ் 21.03.2020 அன்று 11:59:23 பதிவு செய்யப்பட்டுள்ளதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் காலை 11.58 மணிக்கு வழக்கின் 3 ஆவது எதிரி சேதுபதி என் மகனிடம் பேசியுள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 11.58 க்கு சேதுபதி என் மகனிடம் பேசிய சம்பந்தமான Call Details சா.பொ.ஆ 4 ஆக தாக்கல் செய்துள்ளேன். அந்த சேதுபதி என்பவர் நான் குறிப்பிட்டுள்ள போன் நம்பரை அன்றைய தினம் பயன்படுத்தினாரா என்பதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை. Call details என்பதை யார் எந்த நபரிடம் பேசியுள்ளனர் என்பதை நாம் எடுக்க கூடிய விவரங்கள் என்றால் சரிதான். என்ன பெயர் போனில் பதிவில் உள்ளதோ அந்த பெயர்தான் call details ல் வரும் என்றால் சரிதான். அந்த அமீர்கானின் போன் நம்பர் எனக்கு தெரியும். அந்த அமீர்கான் எத்தனை முறை பேசியுள்ளார் என்பதற்கு AA என்று சா.பொ.ஆ 4 ல் குறிப்பிட்டுள்ளேன். இந்த Call details என்பது ஏற்கனவே எடுத்த நகலின் xerox தான் என்றால் சரிதான். அதன் அசல் என் வீட்டில் உள்ளது. 24.06.2020 ல் தான் call details எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலை 11.58 மணிக்கு சேதுபதி என் மகனிடம் பேசியதாக 21 ஆம் தேதி குறிப்பு இல்லை என்றால் ஆவணத்தை நீதிமன்றத்தில் சாட்சி பார்த்து தன் அசல் ஆவணத்தில் அந்த விவரம் இருப்பதாக சாட்சியம் அளிக்கிறார். சாட்சி சா.பொ.ஆ.4 ல் அந்த குறிப்பு இல்லை. அந்த சாட்சி சா.பொ.ஆ 4 அடிப்படையில் சேதுபதி என் மகனிடம் 21.03.2020 ல் 11 முறை பேசியுள்ளார். அன்று என் மகன் சேதுபதியிடம் பேசினாரா என்றால் Missed Call கொடுத்து

பேசியுள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். அன்று எத்தனை முறை என் மகன் சேதுபதியிடம் பேசினார் என்றால் ஒருமுறை பேசியதாகதான் Call list ல் உள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். சா.ஆ.2 Audiio file ல் 11 முறை என் மகன் பேசியதாக பதிவு உள்ளதா என்றால் ஒரு முறை பேசியதாகதான் பதிவு உள்ளது. சாட்சி சா.பொ.ஆ 4 ல் என் மகன் இறப்பதற்கு முன்பு யார் யார் என் மகனிடம் பேசியுள்ளனர் என்று தெரிந்து கொண்டேனா என்றால் சேதுபதி பேசியது மட்டும் தெரியும், மற்ற எண்கள் யார் யாருடையது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கின் என் மகனுடன் சம்பவத்தின் போது சென்ற கல்யாணகுமார் என்பவரிடம் செல்போன் எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நம்பரை பார்த்தால் தெரியும். சா.பொ.ஆ 4 ல் 9443593734 என குறிப்பிட்டுள்ள எண் கல்யாணகுமாருடையது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த நம்பர் கல்யாணகுமாரின் செல்போன் நம்பர் என்றும் தற்போது தெரியாது என வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 21.03.2020 ல் இரவு 10.07 மற்றும் 10.10 க்கு மேற்படி எண்ணிற்கு போன் கால் பேசப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரவு 8.30 மணிக்கு என் மகனுடன் கல்யாணகுமார் இராமநாதபுரத்திற்கு சென்றுள்ள நிலையில் இரவு 10.07 மற்றும் 10.10 க்கு மேற்படி கல்யாணகுமார் என் மகனுடன் போனில் பேசியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சாட்சி சா.பொ.ஆ.2 Audio file ல் இருந்து Pendrive க்கு விவரங்களை மாற்ற அதற்கான தனித்துவம் பெற்ற நபரால்தான் முடியும். கணிணியில் மாற்றி அதிலிருந்துதான் விவரங்களை எடுத்து தரமுடியும் என்றால் சரிதான். அவ்வாறு மாற்றிய நபர் இந்திய சாட்சி சட்டம் பிரிவு 65–பி ன் கீழ் ஒரு சான்று வழங்க வேண்டும். இரண்டு நபர்கள்தான் பேசிய நபர்களின் குரலை Sample எடுத்து பதிவு செய்து Spectagraph மூலம் டெஸ்ட் எடுத்துதான் அந்த குரலின் உண்மை தன்மையை யார் பேசியது என கண்டறிய முடியும் என்றால் இந்த விவரம் எனக்கு தெரியாது. சா.பொ.ஆ 1, 2 இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. சாட்சி சான்று ஆவணம் 3 இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. சாட்சி

சான்று ஆவணம் 3 Xerox ஆவணம் என்றும் Screen ல் இருந்து Computer க்கு மாற்றிதான் எடுக்க முடியும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சாட்சி சான்று ஆவணம் 1 ஐ எடுத்த நபர் அதனை சான்றிட்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65–பி ன் படி சான்று வழங்க வேண்டும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சாட்சி சான்று ஆவணம் 4 ஐ போன் நிறுவத்தின் nodel officer தான் எடுக்க முடியும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சாட்சி சான்று ஆவணம் 4 யாரால் எடுக்கப்பட்டது என்பதற்கு கையெழுத்து இல்லை. அது ஒரு xerox ஆவணம் என்றும் அதில் தகுந்த அதிகாரி கையெழுத்து இடவேண்டும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சாட்சி சான்று ஆவணம் 4 ம் சாட்சிகளை கலைக்க தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதேபோல் சம்பந்தபட்ட நபர் அந்த இடத்தில் இருந்தாரா என்பதை குறித்து Tower Location வைத்து அறியமுடியும். Tower Location எடுக்க நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சாட்சி சான்று ஆவணம் 1 முதல் 4 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களுக்கும் எதிரி சேதுபதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

Taken down to my dictation, in my presence
and hearing and under my personal direction
and superintendence and interpreted to the witness
in the presence of the accused and admitted to the
witness to be correct.

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)